டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 6.09.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 067 - Madurai | Online Edition

# அடுத்த ஆண்டு பிப்ரவரி வரை எல் நினோ நீடிக்கும்..!

புது தில்லி, செப்.5

உலக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தற்போதைய எல் நினோ முந்தைய ஆண்டுகளை விட மிகவும் சக்தி வாய்ந்ததாக உருவெடுத்து வருகிறது. இது கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகத் தீவிரமான ஒன்றாக மாறக்கூடும். வரும் மாதங்களில் மேலும் தீவிரமடைந்து, 2026ம் ஆண்டின் இறுதிக்குள் அதன் உச்சத்தை எட்டும். உலகம் எங்கும் உள்ள பெரும்பாலான நிலப்பரப்புகளில் இயல்பை விட அதிகமான வெப்ப நிலையும், தீவிர வெப்ப அலைகளும் ஏற்படும். உலகளவில் மழைப்பொழிவு மற்றும் வானிலை முறைகளில் கடுமையான மாற்றங்கள் ஏற்படும். சில பிராந்தியங்களில் மிகக் கடுமையான வறட்சியும், சில இடங்களில் கடுமையான புயல் மற்றும் வெள்ள அபாயமும் ஏற்படும். இந்தியாவில் தென்மேற்கு பருவமழை பலவீனமடைந்து, கடுமையான வறட்சி மற்றும் பற்றாக்குறை ஏற்படுவதற்கான அபாயம் அதிகமாக உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை, இது ராபி பயிர்களுக்கான மழைப்பொழிவு குறைந்து, மிதமான குளிர்காலமாக அமையக்கூடும் என்று நிபுணர்கள் கூறினர். தற்போது பசிபிக் பெருங்கடலின் ஆழமான பகுதிகளில் வெப்பநிலை இயல்பை விட 8 டிகிரி செல்சியஸ் வரை உயர்ந்துள்ளதால், இந்த ஆண்டின் இறுதியில் எல் நினோ தனது உச்சக்கட்ட வீரியத்தை அடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 'எல் நினோ' என்பது பசிபிக் கடல் நீரின் மேற்பரப்பு வெப்பம் அதிகரித்து, அது உலக சராசரி வெப்பநிலையை 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் ஒரு கால நிலை நிகழ்வு. இதனால் பருவ மழை பொய்த்து, வறட்சி ஏற்படும். பயிர் விளைச்சல் குறைவு, பணவீக்கம் அதிகரிப்பு, எரிசக்தி பற்றாக்குறை உள்ளிட்ட பல பாதிப்புகள் உருவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவு பயிற்சி




சேலம், செப்.5

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி செயற்கை நுண்ணறிவு என்ற தலைப்பில் சின்னவேலம்பட்டி கிராமத்தில் அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா தலைமையில் நடைபெற்றது.

இதில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி, விவசாயிகள் அனைவரையும் வரவேற்று அட்மா திட்டம் குறித்து விளக்கம் அளித்தார். துணை வேளாண்மை அலுவலர் பிரபாகரன், வேளாண்மை துறையின் மானியங்கள், உயிர் உரங்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். வேளாண்மை உதவி இயக்குநர் சண்முகபிரியா, விவசாயிகள் அடையாள எண் பெறுவதன் முக்கியத்துவம், வறட்சி மேலாண்மை, மானாவாரி சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

பிரபா அக்ரோ டூல்ஸ் நிறுவன உரிமையாளர் பிரசாந்த், கலந்து கொண்டு விவசாயிகள் செயற்கை நுண்ணறிவு குறித்தும் ஆண்ட்ராய்டு கைபேசியில் செயற்கை நுண்ணறிவு ழிஸ்ரீஸ்ரீ செயல்பாடு குறித்தும், பூச்சி மற்றும் நோய்களை புகைப்படம் மூலம் அதனை கண்டறிந்து கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கம் அளித்தார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்களான செல்வி, தமிழ்ச்செல்வி மற்றும் சக்கரவர்த்தி ஆகியோர் செய்திருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோயம்புத்தூர், செப்.5

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி இம்மாதத்திற்கான பயிற்சி, 07.09.26 திங்கட்கிழமை அன்று அளிக்கப்படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நேரம் : காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422-6611214, மின்னஞ்சல் : entomology@ tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

### 32. மஞ்சூரியன் சூப்

**தேவையான பொருட்கள்**

வெஜ் மஞ்சூரியன் உருண்டைகள் — 6

வெங்காயத்தாள் — சிறிது

சோயா சாஸ் — 1 டீஸ்பூன்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

சூப்பை தயார் செய்து இறுதியில் மஞ்சூரியன் உருண்டைகளை சேர்த்து 2 நிமிடம் கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# மலரியல் ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்



கன்னியாகுமரி, செப்.5

வேளாண்மை துறையின் அட்மா திட்டம் மூலமாக வேளாண் நிகழ்வு மலரியல் விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகள் கலந்துரை யாடல் ஆராய்ச்சி நிலையம், தோவாளையில் வைத்து நடை பெற்றது. இந்நிகழ்விற்கு M.R.வாணி, வேளாண்மை இணை இயக்குநர், நாகர்கோவில் மற்றும் முனைவர் R.சுவர்ணப்பிரியா, பேராசிரியர் மற்றும் தலைவர், மலரியல் ஆராய்ச்சி நிலையம், தோவாளை தலைமையில், வேளாண் விஞ்ஞானிகள் முனைவர் R.லதா, முனைவர். K.கவிதா, முனைவர் T.ராஜ்பிரவீன் ஆகியோர்கள் கலந்து கொண்டு காலநிலைக்கேற்ற மலர் வளர்ப்பு குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துணை இயக்குநர் மத்திய மற்றும் மாநில திட்டம், வேளாண்மை துணை இயக்குநர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர், விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு ஆகியோர் கலந்துக் கொண்டு மலர் விவசாயிகளுடன் குறித்து கலந்துரையாடி அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

மலையும் மலை சார்ந்த இடமான குறிஞ்சி நிலத்தில் உள்ள பல்வேறு மரங்கள், கொடிகள், குத்துச்செடிகள், புல் வகைகள் ஆகியவற்றை தொகுத்து புலவர் கபிலர், குறிஞ்சி பாட்டு என்ற இலக்கியத்தில் 99 வகை தாவரங்களை ஆவணப்படுத்தி உள்ளார். அதனை மீட்கும் பொருட்டு தற்போது வரை 72 வகைகள் சேகரிக்கப்பட்டு தோவாளை மலரியல் ஆராய்ச்சி நிலையம் குறிஞ்சி பல்லுயிர் பூங்காவில் நடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியல் கலந்து கொண்ட விவசாயிகள் 72 வகை தாவரங்களை பார்வையிட்டனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை ச.சந்துரு, வேளாண்மை அலுவலர், உழவர் பயிற்சி நிலையம், மேற்கொண்டார். அகஸ் தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டாரங்களிலிருந்து ஆர்வமும் ஊக்கமும் உள்ள விவசாயிகள் கொண்டு பயன் பெற்றனர்.

# பூச்சிகளைத் திசை திருப்பி நெற்பயிரைக் காக்க பொறிப் பயிர்கள்



திருச்சி, செப்.5

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், செம்பறை கிராமத்தில் கிராமப்புற விவசாயப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பயின்று வரும் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி மாணவர்கள் ஹஸ்வத்தா பத்மராஜ், அருந்ததி, கவிதாஞ்சலி, ஹர்ஷினி, ஹரிணி, மௌனிகா, நெல் வயலில் பூச்சித் தாக்குதலைத் தடுக்க பொறிப் பயிர்கள் பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

நெற்பயிரில் பூச்சித் தாக்குதல் காரணமாக மகசூல் பாதிப்பு ஏற்படுவது விவசாயிகள் சந்திக்கும் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்றாகும். பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்காக தொடர்ந்து பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவது உற்பத்திச் செலவை அதிகரிப்பதுடன், பயனுள்ள பூச்சிகள் மற்றும் சுற்றுச் சூழலிலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். இந்நிலையில், பொறிப் பயிர் (Trap Crop) முறையை ஒருங்கிணைந்த பூச்சி மேலாண் மையின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தலாம்.

**பொறிப் பயிர் என்றால் என்ன?**

ஒரு குறிப்பிட்ட பூச்சிக்கு முக்கியப் பயிரைவிட அதிகம் கவர்ச்சியாக இருக்கும் வேறு ஒரு பயிரை, அந்தப் பூச்சியை ஈர்க்கும் நோக்கத்துடன் முக்கியப் பயிரின் அருகில் அல்லது வயலைச் சுற்றி வளர்ப்பதே பொறிப் பயிர் முறை ஆகும். இதன் மூலம் முக்கியப் பயிரில் பூச்சிகளின் தாக்குதலைக் குறைக்க முடியும். நெற்பயிரில் தண்டு துளைப்பான், இலைச் சுருட்டுப்புழு, கதிர்நாவாய்ப்பூச்சி உள்ளிட்ட பல்வேறு பூச்சிகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. குறிப் பிட்ட பூச்சிகளுக்கு ஏற்ற பொறிப் பயிர்களைத் தேர்வு செய்து பயன்படுத்த வேண்டும்.

பொறிப் பயிர்கள் வயலின் வரப்புப் பகுதிகளில் அல்லது வயலைச் சுற்றியுள்ள பகுதிகளில் வளர்க்கப்படலாம். பொறிப் பயிரைத் தேர்வு செய்வது கட்டுப்படுத்த வேண்டிய பூச்சியின் வகையை பொறுத்தது. வேளாண்மையில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சில பொறிப் பயிர்களில் ஆமணக்கு, சாமந்தி, சூரியகாந்தி, கடுகு, வெண்டை, தட்டைப்பயறு மற்றும் காராமணி போன்றவை அடங்கும்.

எனவே, வயலில் காணப்படும் பூச்சியைச் சரியாக அடையாளம் கண்டு, அதற்கேற்ற பொறிப் பயிரைத் தேர்வு செய்ய வேண்டும். பொறிப் பயிர் முறையில் மிக முக்கியமானது வயல் கண்காணிப்பு ஆகும். பொறிப் பயிரில் பூச்சிகள் அதிகமாகக் குவிந்துள்ளதைக் கண்டறிந்தவுடன், அவற்றை உரிய முறையில் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையெனில், பொறிப் பயிரில் பெருகிய பூச்சிகள் மீண்டும் நெற்பயிருக்குப் பரவக்கூடும்.

எனவே, பொறிப் பயிர் முறையைத் தனித்துப் பயன் படுத்துவதற்குப் பதிலாக ஒருங்கிணைந்த முறைகளுடன் இணைத்துப் பயன்படுத்துவது சிறந்தது.



# அங்கக வேளாண்மை / இயற்கை இடுபொருட்கள் தயார் செய்தல் பற்றிய பயிற்சி




திருவள்ளூர், செப்.5

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் கடம்பத்தூர் வட்டாரத்தில் உள்ள செஞ்சி கிராமத்தை சார்ந்த 40 விவசாயிகளுக்கு அங்கக வேளாண்மை/இயற்கை இடுபொருட்கள் தயார் செய்தல் என்ற தலைப்பின் கீழ் ஒரு நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குநர் கடம்பத்தூர் சி.வெங்கடேசன் ஆலோசனையின் கீழ் துணை வேளாண்மை அலுவலர் ம.ரமேஷ், தலைமை தாங்கி பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்கள் பற்றியும் வேளாண்மைத் துறையில் செயல் படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். ரசாயன உரங்கள் பயன் பாடு குறைத்தல், வரப்பு ஓரத்தில் பயறு வகை விதைப்பு, பசுந்தாள் உரம் அளிக்கும் தக்கைபூண்டு. சணப்பை விதைப்பு செய்தல், வயல்களில் பறவை தாங்கி அமைத்தல், சூரிய ஒளி விளக்கு பொறி வைத்து பூச்சிகள் கவர்ந்து அழித்தல் பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

வேளாண் அறிவியல் நிலையம் திரூர் வெங்கடேஸ்வரன் பேசுவையில், அங்கக இடுபொருட்கள் கீழ்கண்ட முறையில் தயார் செய்து விவசாயிகள் பயன்படுத்தியிட கேட்டுக்கொண்டார். ஜீவாமிர்தம் தயாரிப்பதற்கான தேவையான பொருட்கள் மற்றும் செய்முறை பற்றிய விவரங்கள் பின்வருமாறு கூறினார்.

**தேவையான பொருட்கள் :** மாட்டுச்சாணம் 10 கிலோ, மாட்டு

கோமியம் 10 லிட்டர், வெல்லம் (அல்லது கரும்புச் சாறு 4 லிட்டர்) – 2 கிலோ, தண்ணீர் – 200 லிட்டர், கடலை மாவு / தட்டைப்பயறு மாவு / உளுந்து மாவு – 2 கிலோ, ஈரமான மண் – 1 கைப்பிடி, பிளாஸ்டிக் டிரம் (200 லிட்டர் கொள்ளளவு) 1 எண்ணம் 200 லிட்டர் தண்ணீரில் சாணம், கோமியம், வெல்லம் அல்லது கரும்புச் சாறு சேர்க்க வேண்டும். அதனுடன் கடலை மாவு / தட்டைப்பயறு மாவு/உளுந்து மாவு மற்றும் ஈரமான மண் ஆகிய அனைத்தையும் சேர்க்க வேண்டும். இவற்றை பிளாஸ்டிக் பக்கெட்டில் (டிரம்மில்) சேர்த்து நன்றாக மூடி வைக்க வேண்டும். தினமும் காலை, மதியம், மாலை என மூன்ற வேளைகளிலும் கடிகார முள் சுழற்சி முறைப்படி (clockwis) நன்றாகக் கலக்கிவிட வேண்டும். இரண்டு முதல் மூன்று நாளில் இந்த ஜீவாமிர்தக் கரைசல் தயாராகிவிடும். இதனை தயாரித்த ஒரு வாரத்திற்குள் பயன்படுத்த வேண்டும். இந்த கரைசலை எப்போதும் நிழலில் வைத்து பராமரிக்க வேண்டும். கரைசலை வடிகட்டி, ஒட்டும் திரவம் (காதி சோப் அல்லது ஆறிய அரிசிக்கஞ்சி) சேர்த்துப் பயன்படுத்தலாம் என்று கூறினர் மேலும் அதனை பயன் படுத்தும் முறை இலை வழி தெளிப்பாக எல்லா வகை பயிர் களுக்கும் ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் என்ற அளவில் பயன் படுத்தலாம். ஒரு லிட்டர் ஜீவாமிர்தத்தை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து இலை வழி தெளிப்பால் பயன்படுத்தலாம் என்று கூறினர். ஜீவாமிர்தம் பயன்கள் இரசாயன உரத்தால் மலடாகிய மண்ணிற்கு ஜீவாமிர்தம் ஒரு அருமருந்தாகும். இதை மண்ணில் அளிப்பதால் மண்புழுக்கள் அதிகரிப்பதோடு நுண்ணுயிர் குகளைப் பெருக்கும். பயிர்களுக்கு ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலைத் கட்டு படுத்த படுத்தி மகசூல் அதிகம் பெறலாம் என கூறினார்.

மேலும் முன்னோடி இயற்கை விவசாயி கணேஷ் பிரணவ் பேசுகையில், பஞ்சகவ்யா தயாரிப்பு முறைகள் மற்றும் பயன்கள் குறித்து தெரிவித்தார்.

**தேவையான 9 பொருட்கள்**

1. பசு சாணம் – 7 கிலோ (நாட்டு மாடு நல்லது), 2. பசு கோமியம் – 3 லிட்டர், 3. பசும்பால் – 2 லிட்டர், 4. தயிர் – 2 லிட்டர், 5. நெய் – 1/2 கிலோ, 6. கரும்புச்சாறு அல்லது வெல்லம் – 500 கிராம், 7. தேங்காய் தண்ணீர் – 3 லிட்டர், 8. வாழைப்பழம் – 12 (நன்றாக பழுத்தது), 9. கள் அல்லது தண்ணீர் – 2 லிட்டர்.

### தயாரிப்பு முறை (18 நாள்)

நாள் 1: ஒரு பிளாஸ்டிக் டிரம்மில் சாணம் + நெய் நன்றாக கலந்து 3 நாள் வைக்கவும். தினமும் 2 முறை கலக்கவும்.

நாள் 4: மீதி 7 பொருட்களையும் சேர்க்கவும். நன்கு கலக்கவும். வெயில் படாத நிழலில் வைக்கவும். வாயை துணியால் கட்டவும்.

நாள் 4 முதல் 18 வரை: தினமும் காலை மாலை 20 நிமிடம் கடிகார சுற்றில் கலக்கவும்.

நாள் 19: வடிகட்டி பாட்டிலில் அடைக்கலாம். 6 மாதம் வரை கெடாது.

### பயன்படுத்தும் அளவு

– **தெளிப்பு :** 30 மில்லி / 1 லிட்டர் தண்ணீர் (3%) – 15 நாட்களுக்கு ஒருமுறை

– **பாசனத்துடன் :** 200 லிட்டர் / ஏக்கர் – ஜீவாமிர்தம் போல் பாசன நீரில் கலந்து விடலாம்

### பயன்கள்


1. **வளர்ச்சி ஊக்கி :** பயிர் தண்டு பருமனாகும், இலை பசுமையாகும்
2. **பூ பிடிப்பு :** நெல், மிளகாய், தக்காளி, பூசணியில் பூ உதிர்வு 80% குறையும், மகசூல் 20–30% கூடும்
3. **நோய் எதிர்ப்பு :** பூஞ்சாண நோய், இலை சுருட்டல் குறையும்
4. சுவை, மணம் : காய்கறி, நெல்லில் சுவை அதிகம், தரம் கூடும் – இயற்கை சான்றிதழுக்கு உதவும்

### கவனிக்க வேண்டியது

நாட்டு மாட்டு பொருள் தான் சிறந்தது. காலை 6–10 மணிக்குள் தெளிக்க வேண்டும். ரசாயன பூச்சி மருந்துடன் கலக்க கூடாது.

மேலும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வே.அன்பு, பேசுகையில் வேளாண் அடுக்ககத்தில் பதிவு செய்யாத விவசாயிகள் பதிவு செய்யவும் மேலும் உட்பிரிவுகளை இணைக்காத விவசாயிகள் உட்பிரிவுகளை இணைக்கவும் கேட்டுக் கொண்டார்.

பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டது. வேளாண் கண்காட்சியாக உயிர் உரங்கள், நெல், நுண்ணூட்ட கலவைகள், பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் முக்கியத்துவத்தினை பற்றியும் உயிர் உரத்தின் மூலம் விதை நேர்த்த செய்தல் குறித்தும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வெ.இளையராஜா எடுத்து கூறினார். கருத்துக்காட்சிக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பயிர் சாகுபடி மின்னணு கணக்கெடுப்பு என்றால் என்ன? எப்படி?



தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி சாகுபடி செய்யப்பட்ட பயிர்களை (காரீப், ராபி, கோடை) பருவங்களில் கணக்கெடுக்கும் பணி தற்போது காரீப் பருவ சாகுபடி டிஜிட்டல் முறையில் கணக்கெடுப்பு நடைபெற்று வருகின்றன.

## DIGITAL CROP SURVEY (DCS)

மின்னணு முறையில் நடைபெறும் இந்த பயிர் கணக்கெடுப்பு பணியானது நவீன தொழில் நுட்பத்தின் துணையுடன் நிகழ்காலத்தில், விவசாய நிலங்களின் புகைப்படங்களோடு கைபேசி செயலி மூலமாக அனைத்து விவசாய நிலங்களிலும் விடுதலின்றி GPS முறையில், நடத்தப்பட்டு வருகின்றன.

**எப்படி கணக்கெடுப்பு செய்வது?**

பயிர் கணக்கெடுப்பில் ஆன்ட்ராய்டு மொபைலில் உள்ள செயலி (DCS app under agristack) வாயிலாக நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சர்வே எண்ணில், உள்ள உட்பிரிவுகளுக்கு நேரடியாக சென்று, அந்த நிலத்திலிருந்து இருபது மீட்டர் தொலைவில் நின்று புகைபடம் மற்றும் நிலவரத்தை பதிவு செய்ய வேண்டும்.

**இந்த பணிகளை யார் யார் மேற்கொள்ளுகிறார்கள்?**

வேளாண்மை, தோட்டக்கலை, விற்பனை துறை அலுவலர்களுடன் படித்த தன்னார்வலர்களும் பங்கேற்று பணி மேற்கொண்டு வருகின்றனர். கணக்கெடுப்பிற்கு, அரசு ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**ஊக்கத்தொகை எவ்வளவு தெரியுமா?**

ஒவ்வொரு சர்வே, உட்பிரிவுக்கு ஊக்கத்தொகை வழங்கப் படும்.

1) தரிசு நிலத்தை பதிவு செய்ய, ஒரு சர்வே உட்பிரிவுக்கு ரூ.3/ம், ஒரு சர்வே உட்பிரிவில் ஒரே பயிர் மட்டும் பதிவு செய்தால் ரூ.5ம், அதே சர்வே உட்பிரிவில் கூடுதல் ஒவ்வொரு பயிருக்கும் ரூ.2ம் அதிக பட்சமாக ஒரே உட்பிரிவுக்கு ரூ.9 வரை ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

2) மலைப்பாங்கான கிராமங்களுக்கு ஒரு உட்பிரிவுக்கு ரூ.10யும் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

**இதனால் என்ன பயன்கள்?**

கள ஆய்வின் போது நிலத்தின் உண்மை நிலவரத்துடன் பதிவு விபரங்கள் தெரிய வரும். பயிர் கணக்கெடுப்பு மூலமாக பெறப்படும் தரவுகள் மாவட்டத்தின் வேளாண்மை சாகுபடி நிலவரத்தை துல்லியமாக அறிய முடியும்.

வங்கி கடன் பெறவும், பயிர் காப்பீடு மற்றும் வேளாண் தொடர்பான திட்டமிடல் பணிக்கு இந்த டிஜிட்டல் கிராப் சர்வே DCS உதவுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**




# விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த மாநில அளவிலான பயிற்சி




ஈரோடு, செப்.5

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரம், வேளாண்மை உழவர் நலத்துறையின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த மாநில அளவிலான பயிற்சி 01 முதல் 03.09.26 ஆகிய மூன்று நாட்கள் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வுஹியுரு வேளாண்மை கல்லூரிக்கு 30 விவசாயிகளை அழைத்து சென்றனர், அவர்களுக்கு ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் சிறப்புகள் குறித்தும், ஒரு ஹெக்டர் பரப்பில் ஒரு பயிரை மட்டும் சார்ந்து இல்லாமல் பல வகையான பயிர்கள் மட்டும் இல்லாமல் வேளாண்மை சார்ந்த கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் வாத்து, புறா ஆகியன வளர்ப்பது பற்றியும் இனங்கள் கண்டறிந்து தேவைக்கேற்ப எண்ணிக்கை மற்றும் தேர்வு செய்வதன் முக்கியத்துவம் அதற்கு தேவையான தீவனங்கள் சாகுபடி மற்றும் எளிதாக தாங்களாகவே தயார் செய்யும் முறைகள் குறித்தும், அவைகளுக்கு ஏற்படும் நோய்களை கண்டறிந்து எவ்வாறு குணப்படுத்துவது என்பது குறித்தும் உழவியல் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை சார்ந்த பேராசிரியர்கள் விளக்கமாகவும் விரிவாகவும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விரிவாக விளக்கமளித்தார். மேலும் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த அனைத்து செயல்முறைகளையும் விவசாயிகளுக்கு நேரடியாக காண்பித்து விளக்கமாக கூறினார்கள், இதில் சத்தியமங்கலம் வட்டரத்தில் உள்ள கிராமங்களை சேர்ந்த 30 விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியினை வட்டார தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் நந்தினி மற்றும் வீரமணி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# நவீன வேளாண்மையில் மரிக்கொழுந்து சாகுபடி

மரிக்கொழுந்து தவனா என்று பரவலாக அழைக்கப்படுகிறது. இந்த மரிக்கெழுந்தின் இலைகள் பூவிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் தவனா எண்ணெய் (Oil of Devana) என்று பிரசித்திப் பெற்றது. இது பொதுவாக தரம் வாய்ந்த வாசனை திரவியங்கள்




தயாரிக்கவும், வயிற்று பூச்சிகளுக்கு எதிராக தயாரிக்கப்படும் மருந்துகளுக்கு மூலப் பொருளாகவும் பயன்படுகிறது. இலைகள் வெள்ளியின் வெண்மை கலந்த பச்சை நிறத்துடன் காணப்படும்.

மரிக்கொழுந்தின் தழைகள் அதிக வாசனை கொண்டதாக இருப்பதால் மாலைகள் கட்டுவதற்கும் மலர் செண்டுகள் தலை அலங்காரங்கள் மற்றும் ஆன்மீக சடங்குகளுக்கும் உபயோகப் படுத்தப்படுகிறது. நம் நாட்டில் கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திர பிரதேதம் மற்றும் மஹாராஷ்டிராவில் சாகுபடி செய்யப்படுகிறது.

வடிகால் வசதி உள்ள செம்பொறை மண் மரிக்கொழுந்து சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. பொதுவாக மண் நல்ல காற்றோட்டம் உள்ளதாக இருக்க வேண்டும். மண்ணின் கால அமிலத் தன்மை சமநிலையில் இருப்பது நல்லது. மரிக்கொழுந்திற்கு அதிக சூரிய ஒளியும், மிதமான தூறலும் குளிரும் இருக்க வேண்டும். ஆனால் செடிகள் பூக்கும் பருவத்தில் அதிக மழை இருக்கக் கூடாது.

**இரகங்கள்**

மரிக்கொழுந்தில் நெட்டை, குட்டை என இரு இரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் குட்டை இரகம் விரைவில் பூக்கும் நெட்டை இரகத்தில் மலர் மலர்வது தாமதமாகிறது. மரிக்கொழுந்து தழைக்காக வளர்க்கப்படுவதால் நெட்டை இரகமே அதிகம் விரும்பப்படுகிறது.

**நாற்றங்கால்**

ஒரு எக்டரில் நடவு செய்தவற்கு 13 செண்ட் நிலப்பரப்பில் நாற்றங்கால் அமைக்க வேண்டும். மேட்டு பாத்திகளில் 250 கிலோ மக்கிய தொழு உரம் இட வேண்டும். அதில் 1.5 கிலோ விதையை 10 கிலோ மணலுடன் கலந்து மேலாக 10 செ.மீ இடைவெளியில் கோடுகளில் விதைக்க வேண்டும். விதைத்த பின் மணல் கொண்டு விதைகளை மூட வேண்டும். பின்னர் தினமும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். மரிக்கொழுந்தை தண்டின் நுனி குச்சிகள் மூலமும் பயிர் பெருக்கம் செய்யலாம்.

**நடுதல்**

நன்கு உழுத நிலத்தில் 1.5 மீ அகலத்தில் பாத்திகள் அமைத்து பாத்திகளில் 15 X 7.5 செ.மீ இடைவெளியில் ஒரு மாத வயதுடைய நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். பொதுவாக

மரிக்கொழுந்தை தேவை கருதி தழைகளுக்காக இரண்டு மாதத்திற்கு முன்னதாகவும் எண்ணெய்க்காக நான்கு மாதத்திற்கு முன்னதாகவும் நடவு செய்ய வேண்டும்.

**நீர் மேலாண்மை**

செடிகள் மிகவும் மென்மையாக இருப்பதால் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர்பாய்ச்ச வேண்டும்.

**உர மேலாண்மை**

கன்றுகள் நடவின் போது அடியுரமாக 25 டன் தொழு உரம் 125 கிலோ மணிசத்து மற்றும் 75 கிலோ சாம்பல் சத்து ஆகியவற்றை அடி உரமாக இடவேண்டும். மேலுரமாக 125 கிலோ தழைசத்தை நான்கு பகுதியாக பிரித்து நட்ட 25 வது நாள் 110 மற்றும் 145 வது நாளில் இட வேண்டும்.

**மகசூல்**

நடவு செய்த இரண்டு மாதம் அல்லது 75 நாட்கள் கழித்து மரிக்கொழுந்து அறுவடைக்குத் தயார் ஆகிவிடும். பின்னர் மாதம் ஒரு முறை வெட்டி எடுக்கலாம். அதாவது ஒரு முறை நட்ட பின் 5 முதல் 6 மாதம் வரை ஒரு பயிரை தோட்டத்தில் வைத்திருக்கலாம். ஒரு எக்டர் மரிக்கொழுந்து பயிரில் இருந்து 12 டன் கொழுந்து கிடைக்கிறது. அதனை உலர்த்தி எண்ணெய் பிரித்து எடுக்கும் பொழுது 100 கிலோவிலிருந்து சுமார் 230 கிராம் வாசனை எண்ணெய் கிடைக்கும்.

தகவல் : ***யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.***

# குண்டடம் வட்டார மின்னனு பயிர் கணக்கெடுப்பு பணி தன்னார்வலர்களுக்கு வாய்ப்பு

திருப்பூர், செப்.5

தமிழ்நாடு முழுவதும் மின்னனு பயிர் சாகுபடி பரப்புகளை பயிர் வாரியாக சரியாக கணக்கெடுக்க மொபைல் செயலி பயன்படுத்தி மின்னனு முறையில் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் வணிகத்துறை, விதைச் சான்றளிப்புத்துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறையினருடன் இணைந்து கிராமங்களில் உள்ள தன்னார்வலர்களும் ஈடுபட்டுள்ளனர்.

மின்னணு பயிர் கணக்கெடுப்பு மேற்கொள்ளும் நபர்களுக்கு அவர்கள் பதிவு செய்யும் ஒவ்வொரு தரிசு நில உட்பிரிவுக்கு ரூ.3, தனி பயிருக்கு ரூ.5, தன்னார்வலர்களுக்கு கூடுதல் பயிருக்கும் ரூ.2 (அதிகபட்சமாக ரூ.9) மலைப்பயிர்களுக்கு ரூ.10 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது.

இந்த பணிகளில் ஈடுபட விரும்பும் தன்னார்வலர்கள் தங்கள் ஆண்ட்ராய்ட் மொபைலில் அதற்கான செயலியை பதிவிறக்கம் செய்து கணக்கீடு பணியினை மேற் கொள்வதற்கான பயிற்சியை குண்டடம் வட்டாரம், வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மை அலுவலர், வேளாண்மை துணை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் வழங்கிட தயாராக உள்ளனர்.

எனவே தன்னார்வலர்கள் குண்டடம் வேளாண்மை உதவி இயக்குநர் 63833 84167 தொடர்பு கொண்டு பயன அடைய கேட்டுக் கொண்டுள்ளார்.

# பட்டுப்புழுவின் சாக்கி வளர்ப்பு குறித்த பயிற்சி



ஈரோடு, செப்.5

ஈரோடு மாவட்டத்தில் கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் கீழ், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழக மாணவிகள் லேகா ஸ்ரீ, திரிதா, நிசா பார்ஜோ, ஆனந்தி, நதியா மற்றும் கவி வர்ஷினி ஆகியோர் பட்டுப்புழுவின் சாக்கி வளர்ப்பு குறித்த பயிற்சியில் பங்கேற்றனர்.

பயிற்சியில் பட்டுப்புழுவின் இளம் பருவ வளர்ப்பு, தரமான இளம் பட்டுப்புழுக்களைத் தேர்வு செய்தல், மல்பெரி இலைகளைத் தேர்ந்தெடுத்து வழங்குதல் மற்றும் சுத்தமான வளர்ப்பு முறைகளைப் பின்பற்றுதல் குறித்து விளக்கப்பட்டது.

மேலும், சாக்கி வளர்ப்பு நிலையில் வெப்பநிலை, ஈரப்பதம், தூய்மை மற்றும் சரியான உணவு மேலாண்மை ஆகியவற்றை முறையாகப் பராமரிப்பதன் மூலம் ஆரோக்கியமான பட்டுப் புழுக்களைப் பெற முடியும் என மாணவிகள் அறிந்து கொண்டனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நானோ விழிப்புணர்வு முகாம்

மதுரை, செப்.5

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.




இந்நிகழ்வில், இப்கோ கள அலுவலர் ஆனந்தன், இப்கோ நானோ உரங்களான நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, உயிர் உரங்கள் மற்றும் சாகரிகா திரவ உரம் ஆகியவற்றின் நன்மைகள், பயன்படுத்தும் முறைகள் மற்றும் பரிந்துரைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

மேலும், நேச்சுரல் பொட்டாஷ், பயோ டிகம்போசர், மண் பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் மண் ஆரோக்கியத்தைப் பராமரிக்கும் முறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து, மாற்று உரங்களைப் பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

தொடர்ந்து, விவசாயிகளின் நலனுக்காக சங்கட் ஹரன் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நானோ உரங்களை வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இனி தங்கள் பயிர்களில் இப்கோ நானோ உரங்களைப் பயன்படுத்துவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# மீன் அமினோ அமிலம் தயாரிக்கும் முறை மற்றும் பயன்கள்




கடலூர், செப்.5

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் புலத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டுஇளங்கலை வேளாண்மை பயிலும் AB Batch மாணவ மாணவிகள், ELAGR 401- Agriculture Waste Management D ELAGR 402- Organic Production Technology (Experi-ential learning- அனுபவ வழிக் கற்றல்) பாடங்களின் ஒரு பகுதியாக, மீன் அமிலம் (Fish Amino Acid) தயாரிப்பு தொடர்பான நடைமுறை பயிற்சியை கல்வி மற்றும் பயிற்சி நோக்குடன் முறையாக மேற்கொண்டனர்.

இந்த பயிற்சியில் மொத்தம் 50 மாணவர்கள் பங்கேற்று, வேளாண் கழிவுகளை பயனுள்ள உயிர் உரமாக மாற்றும் நடைமுறை அறிவை பெற்றனர்.

**மீன் அமினோ அமிலம் தயாரிக்கும் முறை (Fish Amino Acid Preparation Procedure)**

**தேவையான பொருட்கள்**

1. மீன் கழிவுகள் (தலை, எலும்பு, உள்ளுறுப்பு) – 1 பங்கு
2. வெல்லம் / நாட்டு சர்க்கரை – 1 பங்கு
3. பிளாஸ்டிக் அல்லது மண் தொட்டி
4. சுத்தமான துணி அல்லது மூடி

**தயாரிப்பு நடைமுறை**

1. மீன் கழிவுகளை சிறிய துண்டுகளாக நறுக்க வேண்டும்.

2. அதே அளவு வெல்லம் அல்லது நாட்டு சர்க்கரை எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. மீன் கழிவுகள் மற்றும் வெல்லத்தை தொட்டியில் அடுக்காக சேர்க்க வேண்டும்.

4. கலவையை நன்கு கலந்து, வாயுவெளியேறாத வகையில் நன்கு மூடி வைக்க வேண்டும்.

5. இதனை நிழலான இடத்தில் 21-30 நாட்கள் வைத்திருக்க வேண்டும்.

6. இடையே 3-4 நாட்களுக்கு ஒரு முறை கலவையை மூடி வைத்தபடியே நன்கு குலுக்கி வைத்திட வேண்டும்.

7. புளிப்பு முடிந்த பிறகு, நைலான் வலை (nylon mesh) மூலம் வடிகட்டி எடுக்க வேண்டும்.

**பயன்பாடு**

1 லிட்டர் தண்ணீரில் 5 மில்லி மீன் அமிலம் கலந்து தெளிக்க வேண்டும். பாசன நீருடன் கலந்து பயன்படுத்தலாம். (இந்த முறையில் பயன்படுத்தும் போது குறைந்தது 5 கிலோ மீன் மற்றும் 5 கிலோ வெல்லம் கொண்டு தயாரிக்கப்பட்ட திரவம் பயன்படுத்த வேண்டும். மீன் அமிலத்தின் முக்கியத்துவம் மீன் அமினோ அமிலம் என்பது இயற்கை முறையில் தயாரிக்கப் படும் ஒரு திரவ உயிர் உரமாகும். இது தாவர வளர்ச்சிக்கு தேவையான அமினோ அமிலங்கள், நைட்ரஜன் மற்றும் நுண்ணூட்டச் சத்துகளை வழங்கி, பயிர்களின் வளர்ச்சியையும் மகசூலையும் மேம்படுத்துகிறது. குறிப்பாக இயற்கை மற்றும் கரிம வேளாண்மையில் இதன் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

தகவல் : ***IV இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.***



# உணவு பாதுகாப்பில் தாவர இனப்பெருக்கத்தின் பங்கு : அறிவியல் வேளாண்மை மூலம் பசியற்ற உலகை நோக்கி...

**அறிமுகம்**

'உணவே உயிர்; உணவுப் பாதுகாப்பே மனித குலத்தின் எதிர்காலம்.' உலக மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பின்படி, 2050-ஆம்




ஆண்டில் உலக மக்கள் தொகை சுமார் 9.7 பில்லியனை எட்டும். இந்த மக்கள்தொகைக்கு போதுமான, சத்தான மற்றும் பாதுகாப்பான உணவை உற்பத்தி செய்வது மனிதகுலத்தின் மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது.

இந்தியாவைப் போன்ற விவசாய நாடுகளில், உணவுப் பாதுகாப்பு என்பது வெறும் தானிய உற்பத்தியை மட்டுமல்ல; அனைத்து மக்களுக்கும் போதுமான, சத்தான, தரமான மற்றும் மலிவு விலையில் உணவு கிடைப்பதை உறுதி செய்வதாகும். இந்த இலக்கை அடைய உதவும் மிக முக்கியமான அறிவியல் துறை களில் ஒன்று தாவர இனப்பெருக்கம் (Plant Breeding) ஆகும்.

புதிய, அதிக மகசூல் தரும், நோய் மற்றும் பூச்சிகளைத் தாங்கும், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற காலநிலை மாற்றங்களைச் சமாளிக்கும், மேலும் உயர்ந்த ஊட்டச்சத்து கொண்ட பயிர் ரகங்களை உருவாக்குவதன் மூலம், தாவர இனப்பெருக்கம் உலக உணவுப் பாதுகாப்பின் முக்கிய தூணாக விளங்குகிறது.

**உணவுப் பாதுகாப்பு என்றால் என்ன?**

உலக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) வரையறைப்படி, ‘அனைத்து மக்களும், எல்லா நேரங்களிலும், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தேவையான போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவை உடல், சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பெறும் நிலையே உணவுப் பாதுகாப்பு ஆகும்.‘

**உணவுப் பாதுகாப்பு நான்கு முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டது:**

உணவு கிடைப்பது (Availability)

உணவைப் பெறும் திறன் (Accessibility)

உணவைச் சரியாகப் பயன்படுத்துதல் (Utilization)

தொடர்ச்சியான கிடைப்பு (Stability)

இந்த நான்கு அம்சங்களையும் வலுப்படுத்துவதில் தாவர இனப் பெருக்கம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

**தாவர இனப்பெருக்கம் என்றால் என்ன?**

தாவர இனப்பெருக்கம் என்பது, விரும்பத்தக்க பண்புகளைக் கொண்ட பெற்றோர் ரகங்களைத் தேர்ந்தெடுத்து, கலப்பினம், தேர்வு மற்றும் நவீன உயிரித் தொழில்நுட்ப முறைகள் மூலம் மேம்பட்ட புதிய ரகங்களை உருவாக்கும் அறிவியலும் கலையும் ஆகும்.

**இதன் முக்கிய நோக்கங்கள்**

அதிக மகசூல், நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு, வறட்சி, உப்புத் தன்மை, வெப்பம் போன்ற அழுத்தங்களைத் தாங்கும் திறன், மேம்பட்ட தரம், அதிக ஊட்டச்சத்து, குறுகிய காலத்தில் முதிர்ச்சி, விவசாயிகளுக்கு அதிக இலாபம், பசுமைப் புரட்சியும் தாவர இனப்பெருக்கமும்.

1960-களில் இந்தியா கடுமையான உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொண்டது. அப்போது குறுகிய உயரம் கொண்ட, அதிக மகசூல் தரும் கோதுமை மற்றும் நெல் ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக இந்தியா உணவுத் தானிய இறக்குமதி செய்யும் நாடாக இருந்து, தன்னிறைவு பெற்ற நாடாக மாறியது.

இந்த சாதனைக்கு தாவர இனப்பெருக்கமே அடித்தளமாக இருந்தது. இன்று இந்தியா உலகின் முன்னணி அரிசி, கோதுமை மற்றும் பல வேளாண் பொருட்கள் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

**உணவுப் பாதுகாப்பில் தாவர இனப்பெருக்கத்தின் முக்கிய பங்குகள்**

**1. அதிக மகசூல் தரும் ரகங்களை உருவாக்குதல்**

குறைந்த நிலப்பரப்பில் அதிக மகசூல் பெறுவது காலத்தின் தேவையாக உள்ளது.

**தாவர இனப்பெருக்கம் மூலம் உருவாக்கப்படும் அதிக மகசூல் தரும் ரகங்கள்**

உணவு உற்பத்தியை அதிகரிக்கின்றன, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துகின்றன, உணவுப் பற்றாக்குறையைக் குறைக்கின்றன.

**2. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் ரகங்கள்**

இன்று விவசாயத்தின் மிகப்பெரிய சவால் காலநிலை மாற்ற மாகும்.

**இதனால் ஏற்படுபவை**

வறட்சி, அதிக வெப்பநிலை, திடீர் வெள்ளம், உப்புத்தன்மை, புதிய நோய்கள்.

இவற்றை சமாளிக்கும் திறன் கொண்ட ரகங்களை உருவாக்கு வதில் தாவர இனப்பெருக்கம் முன்னிலை வகிக்கிறது.

### 3. நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு

ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் கணிசமான அளவு மகசூல் நோய் மற்றும் பூச்சி தாக்குதலால் இழக்கப்படுகிறது.

**எதிர்ப்பு ரகங்களை உருவாக்குவதன் மூலம்**

பூச்சிக்கொல்லி பயன்பாடு குறைகிறது, உற்பத்திச் செலவு குறைகிறது, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது, மகசூல் நிலைத் தன்மை பெறுகிறது.

### 4. ஊட்டச்சத்து மேம்பாடு (Biofortification)

இன்றைய உலகில் மறைமுக பசியால் (Hidden Hunger) பல கோடி மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

**தாவர இனப்பெருக்கம் மூலம்**

அதிக இரும்புச் சத்து, அதிக துத்தநாகம், அதிக புரதம், அதிக வைட்டமின்–A கொண்ட பயிர் ரகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இது குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் ஊட்டச் சத்து குறைபாடு உள்ள மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

### 5. வறட்சி மற்றும் உப்புத்தன்மை தாங்கும் ரகங்கள்

**தமிழ்நாட்டில் பல பகுதிகளில்**

நீர் பற்றாக்குறை, உப்புத்தன்மை, அதிக வெப்பம், பெரும் சவாலாக உள்ளது.

இதனை சமாளிக்கும் பயிர் ரகங்கள் எதிர்கால உணவுப் பாதுகாப்பிற்கு அவசியம்.

### 6. குறுகிய கால ரகங்கள்

**குறுகிய காலத்தில் அறுவடைக்கு வரும் ரகங்கள்**

குறைந்த நீரில் வளர்கின்றன, இரு அல்லது மூன்று பயிர்களை ஒரே ஆண்டில் சாகுபடி செய்ய உதவுகின்றன, காலநிலை ஆபத்தைக் குறைக்கின்றன.

### 7. தரமான விளைபொருட்கள்

இன்று சந்தையில் தரமான பொருட்களுக்கு அதிக தேவை உள்ளது.

**தாவர இனப்பெருக்கம் மூலம்**

சிறந்த சமையல் தரம், நல்ல சுவை, நீண்டகால சேமிப்பு, பதப் படுத்தலுக்கு ஏற்ற தன்மை கொண்ட ரகங்கள் உருவாக்கப்படு கின்றன.

## நவீன தாவர இனப்பெருக்க தொழில்நுட்பங்கள்

இன்றைய தாவர இனப்பெருக்கம் பாரம்பரிய தேர்வு முறைகளைத் தாண்டி பல நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துகிறது.

- **Marker-Assisted Selection (MAS)**

மரபணு அடையாளங்களைப் பயன்படுத்தி விரைவாக சிறந்த ரகங்களைத் தேர்வு செய்கிறது.

- **Genomic Selection**

முழு மரபணு தகவல்களின் அடிப்படையில் எதிர்கால செயல் திறனை முன்கணிக்கிறது.

- **Speed Breeding**

ஒரு ஆண்டில் பல தலைமுறைகளை உருவாக்கி ரக மேம்பாட்டை வேகப்படுத்துகிறது.

- **Gene Editing (CRISPR)**

தேவையான மரபணுக்களைத் துல்லியமாக மாற்றி விரும்பத்தக்க பண்புகளை உருவாக்க உதவுகிறது.

- **Doubled Haploid Technology**

மிகக் குறுகிய காலத்தில் தூய இனங்களை உருவாக்க உதவுகிறது.

## இந்தியாவில் தாவர இனப்பெருக்கத்தின் வெற்றிகள்

தாவர இனப்பெருக்கத்தின் மூலம் இந்தியாவில் பல பயிர்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அதிக மகசூல் தரும் நெல் ரகங்கள்

நோய் எதிர்ப்பு கோதுமை ரகங்கள்

எண்ணெய் வித்து மேம்பாட்டு ரகங்கள்

பருப்பு வகைகளில் அதிக மகசூல் ரகங்கள்

உயிரிச் செறிவூட்டப்பட்ட (Biofortified) ரகங்கள்

இவை உணவுத் தன்னிறைவை வலுப்படுத்தியுள்ளன.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

**தமிழ்நாட்டிற்கான வாய்ப்புகள் : தமிழ்நாட்டில் எதிர்கால தாவர இனப்பெருக்கம் பின்வரும் துறைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும்**

வறட்சி தாங்கும் நெல் மற்றும் பருப்பு ரகங்கள்
உப்புத்தன்மை தாங்கும் பயிர்கள்
வெப்பத்தைத் தாங்கும் காய்கறிகள்
அதிக புரதம் கொண்ட பருப்பு வகைகள்
குறைந்த நீரில் வளரும் ரகங்கள்
இயற்கை வேளாண்மைக்கு ஏற்ற ரகங்கள்
எதிர்கால சவால்கள்

**எதிர்காலத்தில் தாவர இனப்பெருக்கம் எதிர்கொள்ள வேண்டிய முக்கிய சவால்கள்**

காலநிலை மாற்றத்தின் வேகம்
புதிய நோய்கள் மற்றும் பூச்சிகள்
நிலப்பரப்பு குறைதல்
நீர்ப்பற்றாக்குறை
ஊட்டச்சத்து குறைபாடு
உயிரினப் பன்முகத்தன்மையைப் பாதுகாத்தபடி புதிய ரகங்களை உருவாக்குதல்

**முடிவுரை :** உலக மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், 'குறைந்த வளங்களில் அதிக உணவு உற்பத்தி' என்பதே வேளாண்மையின் மிகப்பெரிய இலக்காக உள்ளது. இந்த இலக்கை அடைவதற்கான அறிவியல் அடித்தளமாக தாவர இனப்பெருக்கம் விளங்குகிறது. அதிக மகசூல், நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு, வறட்சி மற்றும் வெப்பத் தாங்குதிறன், மேம்பட்ட ஊட்டச்சத்து மற்றும் உயர்தர விளைபொருட்கள் கொண்ட புதிய ரகங்களை உருவாக்கு வதன் மூலம், தாவர இனப்பெருக்கம் உலகளாவிய உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது.

எதிர்காலத்தில் மரபணு அறிவியல், உயிரித் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல் மற்றும் துல்லிய வேளாண்மை ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம், உணவுப் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்த முடியும். அறிவியல் மற்றும் விவசாயம் கைகோர்க்கும் போது மட்டுமே 'பசியற்ற, ஊட்டச்சத்து நிறைந்த, நிலையான உலகம்' என்ற கனவு நனவாகும்.

தகவல் : ***வெங்கடேஷ் ம, உதவிப் பேராசிரியர் (தாவர இனப் பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா.ரா மற்றும் பாமா.ம (இளங் கலை வேளாண் மாணவி), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741